**செப்டம்பர் - 6**

**"பொல்லாப்பு உனக்கு நேரிடாது." - சங் 91 : 10.**

ஒன்றும் நம்மை எந்த விதத்திலும் சேதப்படுத்தாது. நம்முடைய மாம்ச பிரகாரமான சிரத்தைகளிலோ அல்லது சுகானுபத்திலோ அல்லது வாழ்கை விவகாரங்களின் போக்கிலோ காரியங்கள் தலையிடலாம். ஆனால் நாம் மாம்சத்திலில்லை என்றும் ஆனால் ஆவியிலிருக்கிறோம். என்றும் புது இருதயம், புது மனது, புது சித்தம் இவைகளைக் கொண்ட நமக்கு அவருடைய குறித்த காலத்தில் இராஜ்யத்தை வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் என்றும் நாம் நினைவு கூறும் போது வெளிப்புறத்திலுள்ள எந்த செல்வாக்கும் நம்முடைய உண்மையான சிரத்தைகளில் நமது ஆவிக்குரிய சிரத்தைகளில் தலையிடக்கூடாது என்றும் தன்னுடைய உண்மையான ஜனங்களுக்கு வாக்குத்தத்தம் செய்திருக்கிற இராஜ்யத்தின் மகிமைகளை நாம் அடைவதை தடுக்கவும் செய்யாது என்றும் நாம் தெளிவாக அறிந்து கொள்ளலாம். கர்த்தரில் நமக்கிருக்கும் நம்பிக்கையின் சேதமும், அவருக்காக நம்மிடத்திலுள்ள அவிசுவாசமே அவருடைய அன்பிலிருந்தும் அவருடைய வாக்குத்தத்தங்களிலிருந்தும் நம்மைப் பிரிக்கக் கூடும். **- Z ’03, 331 (R 3231)**

பிரதிஷ்டையின் பேரிலுள்ள வேதாகமத்தின் பொதுவான உபதேசமும் யேசு, பவுல், தீமத்தேயு, எப்பாப்பிரோதீத்து மற்ற எல்லாத் தேவனுடைய உண்மையுள்ள பிள்ளைகள் இவர்களின் அனுபவமும் இந்த வாக்கியம் உலகப்பிரகாரமான பொல்லாப்பைக் குறிக்கிறதில்லை என்று நிரூபிக்கின்றன. ஆகையால், வெளிப்படையாக இது ஆவிக்குரிய பொல்லாப்புக்களைக் குறிக்கிறது. இவைகளுக்கு எதிராக தேவன் தமது சொந்த ஜனங்களை பாதுகாக்கிறார். உண்மையுள்ள ஜனங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கின்றது. தேவனுடைய வாக்குத்தத்தங்களும் நம்முடைய அனுபவங்களும் ஏராளமாக இதை நிரூபிக்கின்றன. இந்த உண்மையில் மறுபடியும் மறுபடியும் சந்தோஷப்படாத பரிசுத்தவான் யார்? விசுவாசமுள்ளவர்கள் பத்திரமாக வைக்கப்பட்டிருக்கிறது ஒரு வேதாகமத்துக்குரிய ஆறுதலளிக்கிற அனுபவ அறிவு கொடுக்கிற உபதேசம் எல்லா அனுபவத்திலும், அனுகூலமுள்ளதாகவோ அல்லது அனுகூலமற்றதாகவோ இருந்தாலும் அது நம்மை நன்றாக தைரியசாலிகளாகவும் சந்தோஷமுள்ளவர்களாகவும் ஆக்கும்.
**- P ’34, 128.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**யோபு 17:9; சங் 37:24; 138:8; மத் 24:13; மாற் 4:3-8; லூக் 10:42; 22:31,32; யோவா 6:39; 10:28,29; 15:4,7,9; ரோம 8:33-39; 1கொரி 1:8,9; எபே 6:13; கொலோ 1:22,23; 2தீமோ 4:18; எபி 12:11-13.**

**கோபுர வாசிப்பு : Z ’11, 58 (R 4767).**

**வினாக்கள் : இந்த வசனம் சம்பந்தமாக இந்தவார அனுபவங்கள் என்ன? அவை எவ்வாறு சரிக்கட்டப்பட்டன? அதன் பலன் என்ன?**